# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஜூன் 13, 2026 | Weekly E-paper • June 13, 2026

# கேட்டினும் உண்டு ஓர் உறுதி!

சுப.வீரபாண்டியன்




## இந்தியா கூட்டணியைச் சிதறடிக்கும் காங்கிரஸ்!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

## செத்தான் கோயபலஸ்

தலையங்கம்

## என்னதான் செய்துகொண்டு இருக்கிறார் விஜய்?

சிற்பி செல்வராசு

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ●திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஜூன் 13, 2026 Weekly E-paper ●June 13, 2026

# கேட்டினும் உண்டு ஓர் உறுதி!

சுப.வீரபாண்டியன்

திருவள்ளுவரிடம் எவ்வளவு தெளிவும், தொலைநோக்குப் பார்வையும் இருந்திருக்கின்றன என்பதற்கு, "கேட்டினும் உண்டு ஓர் உறுதி கிளைஞரை நீட்டி அளப்பதோர் கோல்" என்னும் குறளே சான்றாக உள்ளது! உண்மையான நண்பர்கள் யார் என்பதை நமக்குத் துன்பம் வரும் போதுதான் அறிந்து கொள்ள முடியும் என்கிறார் வள்ளுவர்! எனவே துன்பத்திலும் ஒரு நன்மை உள்ளது என்பது அதன் உட்பொருள்!

நடந்து முடிந்த தேர்தலின் முடிவுகள், திமுகவிற்கு ஒரு துன்பத்தைக் கொண்டு வந்திருக்கின்றன என்பது உண்மைதான்! ஆனால் அந்த கேட்டினும் ஒரு நன்மை இருக்கிறது என்பதை இப்போது புரிந்து கொள்ள முடிகிறது!

தேர்தல் முடிவுகள் வந்தவுடனேயே காங்கிரஸ் கட்சி நம்மை விட்டுப் போய்விட்டது! 28 இடங்களில் போட்டியிட்டு, ஐந்து இடங்களில் வென்ற காங்கிரஸ், இப்போது அமைச்சரவையில் இரண்டு இடங்களையும், மாநிலங்களவையில் ஓர் இடத்தையும் பெற்று உள்ள து!

இடதுசாரிகள், சிறுத்தைகள், முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் நம்மிடம் சொல்லிவிட்டுத்தான் சென்றார்கள் என்றாலும், அவர்களின் நிலைப்பாட்டிலும் இப்போது சில வேறுபாடுகள் தெரிகின்றன!

இந்திய பொதுவுடமைக் கட்சி (சிபிஐ) யினர், வெளிப்படையாகவே நாங்கள் திமுக கூட்டணியில் தொடரவில்லை என்று கூறிவிட்டனர்!

மதிமுக வின் நிலை பெரும் ஊசலாட்டத்தில் இருப்பதை அறிய முடிகிறது! துரதிருஷ்டவசமாக உதயசூரியன் சின்னத்தில் நிற்க வேண்டியதாகி விட்டது என்கிறார் துரை வைகோ! இதற்கும் ஒரு படி மேலே போய், திமுக ஒரு நச்சுப் பாம்பு என்று சொல்லும் அளவிற்கு வந்து விட்டார் மதிமுகவின் அவைத் தலைவர் அர்ஜுன்ராஜ்!

அற்ற குளத்து அறுநீர்ப் பறவைகள் என்பதுதானே பழந்தமிழ்ப் பாட்டு!

இந்தச் சூழ்நிலைகளை வைத்து, திமுக பலவீனம் ஆகிவிட்டது என்று சில விமர்சனங்களை, திமுக பலவீனம் ஆக வேண்டும் என்று ஆசைப்பட்ட சிலர் உரத்துச் சொல்லிக் கொண்டிருக்கின்றனர்!

இந்தத் தருணத்தில், திமுகவினர், திமுகவின் மீது ஆழ்ந்த பற்றுடையவர்கள் அனைவரும் உறுதியாக ஒன்றைப் புரிந்து நம்பலாம்!

திமுக பலவீனம் அடையவில்லை.... உண்மையில் இப்போதுதான், முன்னெப்போதைக் காட்டிலும் கூடுதலாகப் பலம் பெற்று இருக்கிறது!

## இறுதி வணக்கம்!

*1941 ஆம் ஆண்டு தேனி அல்லி நகரத்தில் பிறந்த சின்னச்சாமியை யாருக்கும் தெரியாது. ஆனால் இப்போது இயற்கை எய்தியுள்ள திரைப்பட இயக்குனர் பாரதிராஜாவை எல்லோருக்கும் தெரியும்!*



*ஏறத்தாழ 50 ஆண்டுகள், 40க்கும் சற்றுக் குறைவான திரைப்படங்கள்! பாரதிராஜா திரைப்பட அரங்கிற்குள் நுழைந்தார் - தமிழ்த் திரைப்படங்கள் அரங்குகளை விட்டு வெளியேறின!*

*தங்கள் மண்ணை, தங்கள் வயல்களை, தங்கள் வாழ்க்கையை தமிழர்கள் திரைப்படங்களில் பார்த்தார்கள்!*

*அவர் பழமையைத் தன் திரைப்படங்கள் பலவற்றில் எடுத்துக் காட்டி இருக்கிறார்! அலைகள் ஓய்வதில்லை, வேதம் புதிது போன்ற சில படங்களில் பழமையை வெளுத்தும் கட்டியுள்ளார்!*

*அவருடைய முயற்சி மிகப் பெரியது! அவருடைய திரைப்படச் சாதனைகளை மக்கள் என்றும் நினைவில் வைத்திருப்பார்கள்!*


*பாசம் மிகுந்த பாரதிராஜாவிற்கு, இனிய தமிழ் மக்களின் இறுதி வணக்கம்!*

# இந்தியா கூட்டணியைச் சிதறடிக்கும் காங்கிரஸ்!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

அண்மையில் டெல்லியில் நடைபெற்ற இந்தியா கூட்டணிக் கட்சிகளின் கூட்டத்தில் காங்கிரஸ், சமாஜ்வாடி, திரிணமுல் காங்கிரஸ், உத்தவ் சிவசேனா, தேசியவாத காங்கிரஸ் (சரத்பவார் பிரிவு), ராஷ்டிரிய ஜனதாதளம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட், வி.சி.க, தேசிய மாநாட்டுக்கட்சி, ம.தி.மு.க, கேரள காங்கிரஸ், ஆர்.எஸ்.பி, ஆர்.எல்.பி, பாரத் ஆதிவாசி கட்சி, கேரள காங்கிரஸ் (எம்), பார்வார்டு பிளாக், விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, கோவா முன்னேற்றக் கட்சி ஆகிய 23 கட்சிகள் பங்கேற்ற போதிலும், இந்தியா கூட்டணிக் கட்சிகளின் தயவில் ஆட்சி நடத்தும் த.வெ.க பங்கேற்கவில்லை.

பா.ஜ.கவை கொள்கை எதிரி என்று அறிவித்ததுடன் வகுப்புவாத சக்திகளை எதிர்ப்பதாகவும் கூறிக் கொள்ளும் த.வெ.க இந்தியா கூட்டணிக் கூட்டத்தில் பங்கேற்க மறுத்தது ஏன் என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுகிறது. தமிழ்நாடு முதல்வராக பொறுப்பேற்ற விஜய் தனது முதல் டெல்லி பயணத்தில் சோனியா மற்றும் ராகுல் உடனான சந்திப்பை திடீரென ரத்து செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதற்கு "மக்களவையில் பிரதிநிதித்துவம் இருக்கும் கட்சிகள் மட்டுமே இக்கூட்டத்தில் பங்கேற்றதால் த.வெ.க பங்கேற்கவில்லை" என்று காங்கிரஸ் சப்பைக்கட்டு கட்டியது. ஆனால் உண்மையில் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட கேரள காங்கிரஸ் (எம்), பார்வார்டு பிளாக், விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, கோவா முன்னேற்றக் கட்சி ஆகிய 4 கட்சிகளுக்கு மக்களவையில் பிரதிநிதித்துவம் இல்லை. இதன் மூலம் பா.ஜ.கவை பகைத்துக் கொண்டு இந்தியா கூட்டணியில் இடம் பெறுவதை த.வெ.க விரும்பவில்லை என்பது புலனாகிறது. பா.ஜ.கவை எதிர்ப்பதில் போதிய தெளிவும், துணிவும் இல்லாத த.வெ.கவுக்காக இந்தியா கூட்டணியை உருவாக்கிய தி.மு.கவுக்கு காங்கிரஸ் துரோகம் இழைத்திருப்பது பற்றி இந்தியா கூட்டணிக் கட்சிகள் இக்கூட்டத்தில் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தின.



"மாநிலக் கட்சிகள் வலுவாக இருக்கும் இடங்களில் அவற்றுடன் போட்டி போடுவதற்கு பதிலாக காங்கிரஸ் அவர்களை ஆதரிக்க வேண்டும்" என்று சமாஜ்வாதித் தலைவர் அகிலேஷ் யாதவ் அவர்களும், "இரண்டு அமைச்சர் பதவிகளுக்காக, நம்பகமான கூட்டாளியான தி.மு.கவை காங்கிரஸ் கைவிட்டு விட்டது" என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஜான் பிரிட்டாஸ் அவர்களும், "சமீபத்திய தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி கையாண்ட தேர்தல் வியூகம், இந்தியா கூட்டணியின் வலுவான தூண்களாக இருக்கும் மாநிலக் கட்சிகளைப் பலவீனப்படுத்தி உள்ளது. கேரளா, மேற்கு வங்கம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் காங்கிரஸ் எடுத்த தன்னிச்சையான முடிவுகள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், திரிணாமுல் காங்கிரஸ், திமுக ஆகிய கூட்டணிக் கட்சிகளுக்கு அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. இது எதிர்க்கட்சிகளின் ஒற்றுமைக்கு உகந்தது அல்ல என்பதால் காங்கிரஸ் கட்சி தனது அணுகுமுறையை உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும்" என்று விடுதலைச்சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் அவர்களும் காங்கிரஸ் கட்சியைக் கண்டித்தனர்.

"இந்தியா கூட்டணிக்குள் மீண்டும் தி.மு.கவைக் கொண்டுவர காங்கிரஸ் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று ராஷ்ட்ரியா ஜனதா தளத் தலைவர் தேஜஸ்வி யாதவ் அவர்களும், தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர்

உமர் அப்துல்லா அவர்களும் வலியுறுத்தினர். இவ்வாறு இக்கூட்டத்தில்

தி.மு.கவை காங்கிரஸ் கையாண்ட விதம் குறித்து

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## செத்தான் கோயபலஸ்

"மக்கள் எளிதில் நம்பக்கூடிய மிகப்பெரிய பொய்யை உருவாக்கி, அதை மக்களிடம் சொல்ல வேண்டும். அந்தப் பொய்யைத் தொடர்ந்து சொல்லச் சொல்ல மக்கள் அதை உண்மை என்று நம்பிவிடுவார்கள்" என்று சொல்கிறார் ஜோசப் கோயபல்ஸ் . ஜெர்மனியின் சர்வாதிகாரி, நாஜி கட்சியின் தலைவர் அடால்ப்ட் இட்லரின் நண்பர் இவர்.

1) சென்னையில் சிங்கப் பெண்ணே தொடக்க நிகழ்ச்சியில் இந்தியாவிலேயே, ட்ரோன் மூலம் கண்காணிப்பு என்பது இதுதான் முதல்தடவை என்று கூறினார் ஜோசப் விஜய் 09-06-2026 அன்று. இது அப்பட்டமான கோயபல்ஸ் பொய்.

சென்னைப் பெருநகர காவல்துறை 3.6 லட்சம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் இதே ட்ரோன் கண்காணிப்பை அன்றைய டி.ஜி.பி. சைலேந்திரபாபு அடையாறில் தொடங்கி வைத்துள்ளார். அப்போது அவர் இந்தியாவில் இதுதான் முதல்முயற்சி என்றார். அந்தத் தேதி 29-06-2023, அது திமுக ஆட்சி, முதல்வர் மு.க.ஸ்டாலின். இதுதான் உண்மை, வரலாறு!

2) சில வாரங்களுக்கு முன் தென்கொரியாவுக்குப் போயிருந்த தவெக அமைச்சர் கீர்த்தனா, அங்கே ஹுண்டாய் நிறுவனத்தில் எடுத்த சில புகைப்படங்களை வெளியிட்டு, தவெக ஆட்சிக்காகத்தானே தூத்துக்குடியில் கப்பல் கட்டும் துறைமுகம் அமைக்க ஒப்பந்தம் செய்ததாக ஒரு தம்பட்டம் அடித்தார். இதுவும் அப்பட்டமான கோயபல்ஸ் பொய்.

டிசம்பர் 2025இல் மதுரையில் நடைபெற்ற தமிழ்நாடு முதலீட்டு மாநாடு (Tamil Nadu Investment Conclave) அன்று, தென்கொரிய முன்னணி கப்பல் கட்டும் நிறுவனமான ஹுண்டாய் நிறுவனம், தூத்துக்குடியில் புதிய கப்பல் கட்டும் துறைமுகத்தளம் அமைக்க முதல்வர் மு.க.ஸ்டாலின்-தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து ஆகியது. இதுதான் உண்மை, வரலாறு!

3) தமிழ்நாட்டில் மின்வெட்டு தலைவிரித்து ஆடுகிறது. முதலில் கடந்த திமுக ஆட்சிதான் காரணம் என்று சொல்லிப் பார்த்தார்கள், எடுபடவில்லை. இப்போது சம்பந்தப்பட்டத் துறை அமைச்சர் நிர்மல்குமார் சொல்கிறார் யாரோ சிலர் 'பீஸ் கட்டைகளைத் பிடிங்கிக் கொண்டு ஓடிவிடுகிறார்களாம். ஒரு வீடியோவும் 'எடுத்து' வெளியிட்டு விட்டார்கள், சபாஷ்!

இவை நமது கேள்விகள்: 1) தமிழ்நாடு முழுவதும் மின்வெட்டு நடந்த மாவட்டங்களின் இடங்களில் எல்லாம் பீஸ் காரியர்களைப் பிடுங்கிவிட்டார்களா, அவர்கள்? 2) மின் அழுத்தம் மிகுந்த இடத்தில், மின்சாரத்தை நிறுத்தாமல் பீஸ் கேரியரை எப்படி அசால்டாக சில வினாடிகளில் இவர்கள் பிடுங்குகிறார்கள்? 3) எல்லாம் இருக்கட்டும்; வீடியோவுக்குப் போஸ் கொடுத்துக் கொண்டா இவர்கள் பீஸ் பிடுங்குகிறார்கள், அதுவும் ஆவடியில், பட்டப்பகலில்? அடடா! இந்தப் பொய்யைக் கேட்டால் கோயபல்ஸ் செத்தே போவான். நல்ல வேளை அவன் ஏற்கனவே செத்துப் போனான்!

இப்படிப் பொய் சொல்லி முக்காடிட்ட அரசியல் செய்வதை விட்டு, தினமும் நிலவுகின்ற கொலை, கூட்டுக்கொலை, பாலியல் வன்முறை, கூட்டுப் பாலியல் வன்முறை, இருண்டு வரும் தமிழ்நாடு குறித்தவைகளில் கவனம் செலுத்தி, நாட்டுநலனில் அக்கறை காட்ட யாராவது முதல்வர் விஜய்க்கு வழிகாட்டுவார்களா?

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

*இந்தியா கூட்டணியின் பெரும்பாலான கட்சிகள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தன.*

*கேரள முன்னாள் முதல்வர் பினராயி விஜயன் மீதான அமலாக்கத்துறை நடவடிக்கை, மத்திய பிரதேசத்தில் நடைபெற்ற மாநிலங்களவைத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் மீனாட்சி நடராஜன் வேட்பு மனு தள்ளுபடி போன்ற எந்த ஒரு விவகாரத்திலும் பா.ஜ.கவையும், ஒன்றிய அரசையும் கண்டித்து குரல் கொடுக்கத் தயங்கும் த.வெ.கவை கண்மூடித்தனமாக காங்கிரஸ் ஆதரிப்பது இந்தியா கூட்டணி கட்சிகளின் மத்தியில் காங்கிரஸ் மீது வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் மாநிலக் கட்சிகளின் வலிமையை ஒடுக்க நினைக்கும் பாஜகவின் செயல் திட்டத்திற்கு காங்கிரசும் துணை போகிறதா என்கிற சந்தேகம் நமக்கு எழவே செய்கிறது.*

*இந்திய ஒன்றியத்தின் இறையாண்மையை காத்திட, பா.ஜ.க - காங்கிரஸ் அல்லாத ஒரு கூட்டணி தேசிய அளவில் அமைந்திட வேண்டும் என்பது இன்றைய காலத்தின் கட்டாயமாகிறது. சமூகநீதிக் காவலர் வி.பி. சிங் தலைமையில் 'தேசிய முன்னணியை' தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கியதைப் போல, இந்தியா கூட்டணியை உருவாக்கியதில் பெரும் பங்கு வகித்த தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தற்போது தேசிய அளவில் பா.ஜ.க - காங்கிரஸ் அல்லாத ஒரு கூட்டணியை உருவாக்கும் பணியை உடனடியாக தொடங்க வேண்டும். அவரது முன்னெடுப்பில் அக்கூட்டணி சாத்தியமாகும். அதன் வெற்றி சரித்திரமாகும்!* ●

# என்னதான் செய்துகொண்டு இருக்கிறார் விஜய்?

சிற்பி செல்வராசு

தமிழ்நாட்டின் முதலமைச்சர் நாற்காலியில் உட்கார்ந்து இருக்கும் விஜய் அந்த முதல்வர் பொறுப்பின் தன்மையை மறந்து ஏதோ ஒரு நாலாந்தரப் பேச்சாளர் போல, திமுகவைத் திட்டுவதுதான் தன்னுடைய ஒரே குறிக்கோள் என்பது போலப் பேசிவருகிறார்.

புதிதாகப் பொறுப்பேற்ற ஒரு முதலமைச்சர் இந்த மாநிலத்திற்கான நலத்திட்டங்களை எந்த வகையில் எல்லாம் செய்யப் போகிறோம் என்று இதுவரையும் சொல்லவில்லை. மாறாக எதற்கெடுத்தாலும் சம்பந்தம் இல்லாமல் திமுக கழகத்தை திட்டுவது ஒன்றே தீர்வாகிவிடும் என்று நினைக்கிறாரார் அவர்.

பெரியார் காட்டிய வழியில் அண்ணா காட்டிய வழியில் என்னுடைய ஆட்சி நடக்கும் என்றுவேறு சொல்கிறார் அவர். இந்து சமய அறநிலையத் துறையின் அமைச்சராக திருச்சி மாவட்டத்தில் உள்ள திருவரங்கம் தொகுதியில் வெற்றி பெற்ற ஒரு பார்ப்பனரை நியமித்திருப்பதன் மூலமாகவே அவருடைய பெரியார் காட்டிய வழி அம்பலமாகி நிற்கிறது.

பேரறிஞர் அண்ணாவின் பேச்சு பாராளுமன்றத்தை அதிரவைக்கும்.

தமிழ்நாடுசட்டமன்றத்தில்முதலமைச்சர்பொறுப்பேற்ற அவர் பேசும்போதும், விவாதங்களுக்கு, உறுப்பினர்களின் வினாக்களுக்குப் பதில் சொல்லும்போதும் அவர் பேச்சில் ஓர் உயிர்ப்பு இருக்கும். ஆனால்

பேசத்தெரியாத பொம்மையாய் பேரவையில் இருக்கும் விஜய் சொல்கிறார் அண்ணா வழியில் அவரின் ஆட்சியாம்.

விஜய் பொறுப் பேற்ற இந்த 21 நாள்களில் அதிமுகவினுடைய சட்டமன்ற உறுப்பினர்களை குதிரை பேரத்தின் மூலமாக வாங்கி தன்முடைய அரசாங்கத்தைக்காப்பாற்றிக் கொள்ள முயற்சி செய்கிறாரே ஒழிய, வேறு எந்த ஒன்றையும் மக்களுக்காக செய்யவிலலை.ஒரு பள்ளிக்கூடத்துப் பையனை போல காலையில் சீருடை அணிந்து கிளம்பி வருகிறார், மதியம் வீட்டிலிருந்து வந்த டிபன்பாக்ஸ்சில் உணவை சாப்பிடுகிறார், இல்லை சாப்பிடுவதாக நடிக்கிறார்.



மாலை மணி அடித்தால் கிளம்பிவிடுகிற பள்ளிக்கூடப் பையனை போல கிளம்பி விடுகிறாராம் வீட்டுக்கு. எல்லாம் சரி, என்ன வேலையைச் செய்தார் அலுவலகத்தில்? மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு எந்த நிலையில் இருக்கிறது என்பது கூட தெரியவில்லை. சிறுமியர் உள்படப் பாலியல் வன்கொடுமைகள் குறித்து என்ன நடவடிக்கை எடுத்தது அரசு?

அஜித்குமார் என்கின்ற ஒரு இளைஞர் காவல்துறையினரால் அடித்துக் கொல்லப்பட்ட பொழுது அவரது பெற்றோரிடம் அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருத்தம் தெரிவித்து ஆறுதல் சொன்னார். அது மனிதமாண்பு.

ஆனால் கோவை சூலூரில் பத்து வயது குழந்தை பாலியல்வன்கொடுமைசெய்துகொலைசெய்யப்பட்டாள். அந்தக் குழந்தையின் இறப்புக்கு இன்றைய முதல்வர் விஜய் இதுவரை எந்த ஒரு பதிலும் சொல்ல வில்லையே?

பல்வேறு பகுதிகளில் பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுகிறது. இந்த நிலையில் சிங்கப்பெண்கள் பாதுகாப்பு படை என்று சொல்கிறார், மேடையில். அடுத்து செய்தியாளர்கள் சந்திப்பைப் பார்த்து ஓடுகிறார்.

என்னதான் செய்துகொண்டு இருக்கிறார் முதலமைச்சர்? தைரியாகச் செய்தியாளர்களைச் சந்தித்து விளக்கிச் சொல்வாரா? சொல்ல வேண்டும்! ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian